செய்தி வெளியீடு எண்: 501 நாள் : 18.09.2013

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.9.2013 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலத் துறையின் சார்பில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களுக்கு திருமண உதவித் தொகை, அத்திட்டத்தின் கீழ் வைப்பீடு செய்யப்பட்ட தொகை முதிர்வுக்கான வயதை 18—ஆக தளர்த்தியதன் காரணமாக முன்னரே வழங்கப்படும் முதிர்வுத் தொகை, மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு நவீன ரக தையல் இயந்திரங்கள், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கு உயர்த்தி வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் ஆகியவற்றை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

சமுதாயத்தில் ஆண் குழந்தைகளுக்கு நிகராக பெண் குழந்தைகள் கருதப்பட வேண்டும் என்பதற்காகவும், பெண் கல்வியை மேம்படுத்திடவும், பெண் சிசு கொலை தடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் “பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்” 1992ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 1992ஆம் ஆண்டு முதல் 1995ஆம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட பெண் குழந்தைகள் பெறும் முதிர்வுத் தொகை குறைவாக உள்ளதாலும், தற்போது வழங்கப்படும் திருமண உதவித் திட்டத்தின் பயன் இவர்களுக்கு வழங்கப்படவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும் மற்ற திருமண உதவி திட்டங்களின் கீழ் அனுமதிக்கப்படும் உதவித் தொகை பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன்பெறுபவர்களுக்கும் அளிக்கப்படும் என்றும்; பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகளின் வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை அவர்கள் 20 வயது பூர்த்தி அடைந்தவுடன் வழங்கப்பட்டு வரும் நிலையினைத் தளர்த்தி அக்குழந்தைகளின் உயர் கல்விக்கு பயனளிக்கும் வகையில், இனிமேல் 18 வயது பூர்த்தி அடைந்தவுடனே வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.4.2013 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பெண்களுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள திருமண நிதி உதவியை வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 17.9.2013 அன்று தலைமைச் செயலகத்தில் 2 பயனாளிகளுக்கு திருமண நிதி உதவி வழங்கினார்கள்.

மேலும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் வைப்பீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கான முதிர்வுத் தொகை அக்குழந்தைகளின் உயர்கல்விக்கு பயனளிக்கும் வகையில் அவர்கள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வை எழுதியிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 20 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையினைத் தளர்த்தி அவர்கள் 18 வயது பூர்த்தி அடைந்தாலே போதுமானது என்று மாற்றியமைத்ததன் காரணமாக வைப்புத் தொகைக்கான முதிர்வுத் தொகை முன்னரே வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக 17.9.2013 அன்று ஒரு பயனாளிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் முதிர்வுத் தொகையை வழங்கினார்கள்.

மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பள்ளி மாணவ, மாணவியருக்கான நான்கு இணை பள்ளிச் சீருடைகளை சரியான நேரத்தில் தைத்து முடித்து வழங்க ஏதுவாகவும் இச்சங்கங்களின் பெண் உறுப்பினர்கள் அதிக வருமானத்தை ஈட்டுவதற்கு வழி செய்யும் வகையிலும், 54 கோடி ரூபாய் செலவில் நவீன ரக தையல் இயந்திரங்களை அரசின் 10 விழுக்காடு ஆதாரத் தொகை மானியம் மற்றும் மைய கூட்டுறவு சங்கத்தின் கடன் மூலம் வாங்கி வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 14.5.2012 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள்.

அதன்படி, 54 கோடி ரூபாய் செலவில் 54,000 நவீன தையல் இயந்திரங்களை சமூக நல இயக்குநரக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கும், கடன் தொகையில் 10 விழுக்காடான 5 கோடியே 40 லட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்குவதற்கும் தமிழக அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டன.

அதன்படி, முதற்கட்டமாக 27,900 நவீன ரக தையல் இயந்திரங்களை வாங்கி 27,900 பயனாளிகளுக்கு வழங்குவதற்கு அடையாளமாக 2 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நவீன ரக தையல் இயந்திரங்களை வழங்கி இத்திட்டத்தினைத் துவக்கி வைத்தார்கள்.

புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவற்றின் கீழ் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அங்கன்வாடி உதவியாளர் நிலை–2 / சமையல் உதவியாளர் ஆகியோர் 500 ரூபாயும், அங்கன்வாடி உதவியாளர் நிலை–1 / சமையலர் ஆகியோர் 600 ரூபாயும், சத்துணவு அமைப்பாளர்கள் / அங்கன்வாடி பணியாளர்கள் / குறு அங்கன்வாடி மைய பணியாளர்கள் ஆகியோர் 700 ரூபாயும் மாத ஓய்வூதியமாக பெற்று வருகிறார்கள்.

சமூகநலத் திட்டங்களின் கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான மாத ஓய்வூதியம் ஆயிரம் ரூபாயாக வழங்கப்படும் நிலையில், அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்களுக்கான சிறப்பு ஓய்வூதியம் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்று அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். அவர்களது கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அவர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத்தை 1.4.2013 முதல் ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டார்கள்.

அதன்படி, இத்திட்டங்களின் கீழ் ஓய்வு பெற்ற சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள் பயனடையும் வகையில் உயர்த்தப்பட்ட சிறப்பு ஓய்வூதியத்தை வழங்குவதற்கு அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 2 பயனாளிகளுக்கு உயர்த்தப்பட்ட சிறப்பு ஓய்வூதியத்தை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறைச் செயலாளர் திரு பெ.மு. பஷீர் அஹமது, இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர் திரு வி.எம். சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 18.9.2013